மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

அ.வ.எண்.292/2014

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரொசாரியோ | தொழில் | |
| தகப்பனார் பெயர் | அருள்சாமி | வகுப்பு | |
| வயது | | சமயம் | இந்து |
| நாள் | 24.08.2022 | கிராமம் | |
| சாட்சி | வா.சா.4 | | |

இன்று 24.08.2022 ஆம் தேதியன்று சாட்சி இந்நீதிமன்றம் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டார்.

முதல் விசாரணை

1) நான் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கின் வாதிகளையும், பிரதிவாதிகளையும் எனக்கு நன்றாக தெரியும்.

2) என் தாத்தாவின் பெயர் அம்புரோஸ் பிள்ளை. என் தாத்தாவிற்கு 3 ஆண் குழந்தைகள். என் பெரியப்பா ரத்தினசாமி, என் தந்தை அருள்சாமி, என் சித்தப்பா பெயர் குழந்தைசாமி ஆகும். மேற்சொன்ன 3 நபர்களும் இறந்துவிட்டார்கள்.

3) மேற்படி என் பெரியப்பாவும், என் தந்தையும், என் சித்தப்பாவும் சேர்ந்து வாதிகளின் தகப்பனார் காளியப்பன் என்பவருக்கு தாவா சொத்தை விற்பனை செய்துள்ளார்களா என்றால், விற்பனை செய்துள்ளார்கள். அப்போது நான் 12ம் வகுப்பு படித்து வந்தேன்.

4) என் தந்தை கடந்த 1992ம் வருடம் இறந்தார். என் தந்தை உயிருடன் இருந்த காலத்தில் மேற்படி தாவா சொத்தை வாதிகளின் தகப்பனாருக்கு விற்பனை செய்த விவரத்தை என்னிடம் சொல்லியுள்ளார்.

5) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2வதாக கண்டுள்ள கையெழுத்து என்னுடைய தந்தையுடையது. முதலாவதாக கண்டுள்ள கையெழுத்து எனக்கு யாருடையது என்று தெரியாது.

6) என் தாத்தாவிற்கு ஆதியில் இந்த வழக்கில் உள்ள சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால், அவருக்கு நீதிமன்ற தீர்ப்பாணையின் படி பாத்தியப்பட்டது.

7) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் என் தந்தையும், என் பெரியப்பாவும் சேர்ந்து எவ்வளவு நிலத்தை வாதியின் தந்தைக்கு விற்பனை செய்ததாக கண்டுள்ளது என்றால், சர்வே எண்.848 ல் உள்ள மொத்த விஸ்தீரனம் 5.42 ஏக்கரில் 2.50 ஏக்கர் நிலத்தை மட்டும் விற்பனை செய்துள்ளதாக உள்ளது.

8) மேற்படி பத்திரத்தில் என்ன சக்குபந்தி விவரங்கள் கண்டுள்ளது என்றால், குப்புசாமி கவுண்டர் நிலத்திற்கு மேற்கு, கோம்பைக்கு செல்லும் பாதைக்கு கிழக்கு மற்றும் தெற்கு, சண்முகம் காட்டிற்கு வடக்கு இதன் மத்தியில் 2.50 ஏக்கர் நிலம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

9) என் தந்தை காலமானதற்கு பின்னிட்டு இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கு நான் சில நிலங்களை விற்பனை செய்துள்ளேன் என்று சொன்னால், சரிதான். அதில் 1ம் பிரதிவாதி மாரியப்பனுக்கு எவ்வளவு நிலம் விற்பனை செய்துள்ளேன் என்று சொன்னால், 6.45 செண்டு நிலத்தை விற்பனை செய்துள்ளேன்.

10) அவ்வாறு விற்பனை செய்த பத்திரத்தில் உள்ள சக்குபந்தி விவரத்தில் நான்கு புற எல்லைகளில் ஏதேனும் ஒரு புறத்தில் வாதியின் நிலம் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால், தற்போது எனக்கு சரியாக நினைவில்லை. நான் 1ம் பிரதிவாதிகளுக்கு கிரயம் செய்து கொடுத்த சர்வே எண்.848/1A ஆகும். அதில் மொத்தம் 31 செண்டில் நிலம் உள்ளது. அதில்தான் நான் 6.45 செண்ட் நிலத்தை 1ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துள்ளேன்.

(வாதி தரப்பில் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வா.சா.4ன் முதல் விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

ஒம்/-திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.